**MINUTES OF PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED PROJECT OF M/S. TAMILNADU CEMENTS CORPORATION LIMITED (ALANGULAM LIMESTONE MINES), G.O.NO.215, ALANGULAM AND LAKSHMIPURAM VILLAGES OF VEMBAKOTTAI TALUK, VIRUDHUNAGAR DISTRICT ON 22.02.2024, 11.00 A.M AT PERIYATHAI KANDASAMY KALYANA MANDAPAM, 3/367-A, MANAVALAN THOTTAM, ALANGULAM VILLAGE, RAJAPALAYAM VIA, VEMBAKOTTAI TALUK, VIRUDHUNAGAR DISTRICT.**

**Present:**

**Thiruvalargal:**

| | | | |
|---|---|---|---|
| 1 | M. Sivakumar | : | Revenue Divisional Officer<br>Sattur. |
| 2 | G. Ramaraj | : | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Virudhunagar. |
| 3 | D.M. Krishnababu | : | Assistant Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Virudhunagar. |
| 4 | P.Muthupandeeswari | : | Tahsildar,<br>Vembakottai Taluk.<br>Virudhunagar |
| 5 | V. Kalaijothi | : | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Virudhunagar. |

Public, Project proponent 115 Nos (List enclosed)

The public hearing under EIA Notification, 2006 for the proposed project of M/S. Tamilnadu Cements Corporation Limited (Alangulam Limestone Mines), G.O.No.215, Alangulam And Lakshmipuram Villages Of Vembakottai Taluk, Virudhunagar District was held at Periyathai Kandasamy Kalyana Mandapam, 3/367-A, Manavalan Thottam, Alangulam Village, Rajapalayam Via, Vembakottai Taluk, Virudhunagar District. The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar welcomed the Revenue Divisional Officer, Sattur, other government officials, all general public and project proponents who have attended the public hearing. He informed that the public

notices informing the conduct of Public Hearing was published in "Dinathanthi" and "The New Indian Express" on 12.01.2024. He also informed that wide publicity was given about the conduct of public hearing by circulating pamphlets in the nearby villages of the project site. Further, he stated that the arrangements for the public hearing had been done as per the guidelines issued under EIA Notification, 2006. Subsequently, the District Environmental Engineer stated that the project proponent will make a detailed presentation on the proposed project and requested the public to express their views after completion of the presentation. He added that the written complaints would also be received.

He also stated that the views, suggestions and queries of the public will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority, Tamilnadu.

The Revenue Divisional Officer, Sattur initiated the Public Hearing process. After that, the District Environmental Engineer requested the project proponent to explain about their proposed project.

Then, the Environmental consultant of the project has made detailed presentation on the project of M/S. Tamilnadu Cements Corporation Limited (Alangulam Limestone Mines), G.O.No.215 to the public along with Environmental Management Plan.

After that, the public has furnished their views with respect to the project as follows –

1. Thiru.Mookkaiya, State Vice President:

   Thiru.Mookkaiya said that this project should come and give employment to already worked senior workers in this project. Further, he requested to carry out the quarrying of limestone without any damage. He also said that the Alangulam cement plant should be operated continuously and at present the environment condition in the cement plant is good. Hence, he welcomed this project by saying that the farmers in this village should be given top priority in employment.

2. Thiru.Muthupandi, Alangulam:

Thiru.Muthupandi said that the location of this limestone quarry site is nearer to their agricultural land and there is no problem due to quarrying operation. He also said that he has been doing agriculture there for the last 50 years. He also requested, to use advance technologies for quarrying of limestone and requested for proper construction of roads. Also requested to give water stored in the quarry pit for agriculture use. He welcomed this project by saying that top priority should be given to their village people for employment.

3. Thiru.Ayyalsamy, Alangulam:

Thiru.Ayyalsamy said that in 2015, he worked as office in-charge in this cement plant and they are continuously protested to function this cement plant continuously; but, it was not yet started. Therefore, he said that, this limestone quarry should be operated for continuous operation of this cement plant. However, he stated that reject/waste generated from mining activity was dumped near by areas. He also informed that at present the cement plant is running here by transporting clinker from Ariyalur only and also asked for clarification whether the quarrying of limestone mined will be used at the cement plant in Alangulam only. At the end, he welcomed the project by saying that limestone mines should be established here and requested that educated students of this village should be given for priority in employment.

4. Thiru. Ukkirapandiyan, Alangulam:

Thiru.Ukkirapandiyan stated that mining of limestones in this quarry should be used only for the Alangulam cement plant and also requested to give priority in their village people in employment. He also welcomed this project.

5. Thiru.Krishnan and other representatives of ADMK:

Thiru.Krishnan said that limestone is taken from many villages in Virudhunagar District through this project. He also requested to clarify the end use of this mined limestone. He also said that no notice or prior intimation was given to the public about this meeting. Further, he also said that earlier they were reported that there is no limestone in this locations; but, now how meeting in being conducted stating that there is limestone here. He also said that this meeting is being conducted for the purpose of running M-sand unit and if they give permission for this project, he will conduct a protest along with public.

6. Thiru.Nethaji, Usilampatti:

Thiru.Nethaji from Usilampatti stated that purpose of conducting this meeting is to state that Environmental Impacts only and said that many years ago, there was good water in the odais; but, now depth of the water level is increased due to quarrying activity. Also stated that this destruction of water bodies due to quarrying operation leads to the destrution of bio diversity. Further, he said that there is a possibility of heavy earthquakes in this area due to quarrying activities. He further said that as per EIA report, there is a violation under section 36(1) & 36(1)(9) the Minor Mineral Rules, 1959. He said that according to the Minor Mineral Rules, no permission can be given for quarrying operation, if the houses are within 300 meters. Also, he told that general pathways are running through this project area. He said that, if approval is given to this mines this place will become a dangerous seismic zone. So, permission shall not be given to this project. He also said that Vembakottai dam is located at a distance of 4 km from this location and they have not submitted 35 out of 45 documents required for getting Environmental Clearance. He said that there is no air and noise pollution surveys have been conducted in the existing mining areas and also no fencing have been erected. At the end, if approval is given to this project, this place will become dry place.

The meeting should be held again after the unit furnishes all the documents properly and he requested that, permission should not be given to this project.

After that, since no one came forward to give view on the project, the Revenue Divisional Officer, Sattur invited the public to offer their further more views if any. Even after that, no one came forward to give any opinion. Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar has narrated the proceedings of the public hearing conducted. He also thanked all and requested to furnish their views if any in written.

With this, the meeting came to the end.

29.2.2024

District Environmental Engineer,
Tamilnadu Pollution Control Board,
Virudhunagar

Revenue Divisional Officer,
Sattur,
Virudhunagar District.

**Enclosures:**

1. Copy of Attendance Register (Total 9 – pages, 115 persons)
2. Videograph of public hearing meeting (CD format)
3. Copy of Public Notices (both Tamil & English).

விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை வட்டம், ஆலங்குளம் மற்றும் லட்சுமிபுரம் கிராமங்களில் தி/ள்.தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் (ஆலங்குளம் சுண்ணாம்புக்கல் சுரங்கம், அரசாணை எண்: 215) அவர்களால் 180.83.0 ஹெக்டர் பரப்பளவில் உத்தேசிக்கப்பட்டுள்ள சுண்ணாம்புக்கல் சுரங்கம் தொடர்பாக 22.02.2024 முற்பகல் 11.00 மணியளவில் தி/ள். பெரியதாய் கந்தசாமி கல்யாண மண்டபம், 3/367-ஏ, மணவாளன் தோட்டம், ஆலங்குளம் கிராமம், இராஜபாளையம் வழி, வெம்பக்கோட்டை வட்டம், விருதுநகர் மாவட்டத்தில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் குறிப்புகள்.

பங்கேற்றோர்:

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு. மு. சிவகுமார் | : | வருவாய் கோட்டாட்சியர்,<br>சாத்தூர் |
| 2 | திரு. கு. இராமராஜ் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விருதுநகர். |
| 3 | திரு.து.மு.கிருஷ்ணபாபு | : | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விருதுநகர். |
| 4 | திருமதி.பா.முத்துபாண்டீஸ்வரி | : | வட்டாட்சியர்,<br>வெம்பக்கோட்டை வட்டம்,<br>விருதுநகர். |
| 5 | செல்வி.வே. கலைஜோதி | : | உதவிப் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விருதுநகர். |

பொதுமக்கள் மற்றும் தொழிற்சாலை பிரதிநிதிகள் 115 நபர்கள்
(பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது)

வெம்பக்கோட்டை வட்டம், ஆலங்குளம் மற்றும் லட்சுமிபுரம் கிராமங்களில் தி/ள்.தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் (ஆலங்குளம் சுண்ணாம்புக்கல் சுரங்கம், அரசாணை எண்:215) நிறுவனத்திற்கு, சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கையின் கீழ் சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதற்காக, பொதுமக்களின்

கருத்தினை அறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் திரு. பெரியதாய் கந்தசாமி கல்யாண மண்டபம், 3/367-ஏ, மணவாளன் தோட்டம், ஆலங்குளம் கிராமம், இராஜபாளையம் வழி, வெம்பக்கோட்டை வட்டம், விருதுநகர் மாவட்டத்தில் 22.02.2024 முற்பகல் 11.00 மணியளவில் துவங்கியது. மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விருதுநகர் அவர்கள் கூட்டத்திற்கு வருகை புரிந்த வருவாய் கோட்டாட்சியர், சாத்தூர் மற்றும் ஏனைய அரசு அதிகாரிகள், பொதுமக்கள் மற்றும் தொழிற்சாலையின் பிரதிநிதிகள் அனைவரையும் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விபரம் குறித்து ஏற்கனவே "தினத்தந்தி" மற்றும் "தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் 12.01.2024 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். இப்பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம், நடத்துவது தொடர்பாக பொதுமக்களுக்கு துண்டு பிரசுரங்கள் மூலம் விரிவாக விழிப்புணர்வு மற்றும் அறிவிப்பு செய்ததைக் கூறினார். இந்த கூட்டத்திற்கான ஏற்பாடுகள் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கை 2006ல் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

இத்திட்டம் தொடர்பாக தொழிற்சாலை பிரதிநிதி விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் தங்களது கருத்துக்களைத் தெரிவிக்கலாம் எனக் கேட்டுக்கொண்டார். எழுத்துப்பூர்வமாக கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புபவர்களும் அதனை வழங்கலாம் எனத் தெரியப்படுத்தினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக நடைபெறும் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கைகள் வீடியோகிராபி மூலம் பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் குறிப்புகளுடன் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டுஆணையத்திற்கு அனுப்பப்படும் எனத் தெரிவித்தார்.

பிறகு, வருவாய் கோட்டாட்சியர், சாத்தூர் அவர்கள் பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டத்தினை துவக்கி வைத்தார். பின்பு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தொழிற்திட்டம் குறித்து விளக்குமாறு தொழிற்சாலை பிரதிநிதியைக் கேட்டுக்கொண்டு, அதன்பின் பொதுமக்கள் தங்கள் கருத்துகளைத் தெரிவிக்கலாம் என்று கூறினார்.

அதன்பின் தி/ள்.தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் (ஆலங்குளம் சுண்ணாம்புக்கல் சுரங்கம், அரசாணை எண்:215) நிறுவனத்தின் சுற்றுச்சூழல் ஆலோசகர், இத்திட்டம் தொடர்பாகவும் மற்றும் இது தொடர்பான சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் விளக்கவுரையாற்றினார்.

பின்னர், இக்கூட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட தொழிற்திட்டம் குறித்து வாய்மொழியாக பொதுமக்களால் வழங்கப்பட்ட கருத்துக்கள் பின்வருமாறு:

1. <u>திரு.மூக்கையா, மாநில துணைத் தலைவர்:</u>

திரு.மூக்கையா அவர்கள், பழையபடி இத்திட்டமானது வரவேண்டும், மேலும் மூத்த தொழிலாளர்களுக்கு இத்திட்டத்தில் வேலை தர வேண்டும் எனவும் மற்றும் பாதிப்பு ஏதும் இல்லாமல் இயக்குமாறும் கேட்டுக்கொண்டார். மேலும், TANCEM சிமெண்ட் ஆலையும் தொடர்ந்து ஆரம்பிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார். தற்போது சிமெண்ட் ஆலையில் சுற்றுச்சூழல் நன்றாக உள்ளதாகவும் கூறினார். எனவே இந்த கிராமத்திலுள்ள ஏழை விவசாய மக்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை தருமாறு கூறி இத்திட்டத்தினை வரவேற்றார்.

2. <u>திரு.முத்துப்பாண்டி, ஆலங்குளம்:</u>

திரு.முத்துப்பாண்டி அவர்கள், இந்த குவாரியின் அமைவிடமானது அவர்கள் தோட்டத்திற்கு அருகில் உள்ளதாகவும் கூறி அதனால் எந்த வித பாதிப்பும் இல்லை என தெரிவித்தார். மேலும், அவர் 30 வருடமாக அங்கு விவசாயம் செய்து வருவதாகவும் கூறினார். மேலும், குவாரி இயக்கத்தின்போது நவீன தொழில்நுட்பங்களை உபயோகிக்குமாறும் முறையாக சாலை அமைக்குமாறும் மற்றும் குவாரியில் தேங்கியுள்ள நீரை விவசாயத்திற்கு தருமாறும் கேட்டுக்கொண்டார். தொடர்ந்து இப்பகுதி, மக்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை தருமாறு கூறி இத்திட்டத்தினை வரவேற்றார்.

3. திரு.அய்யல்சாமி, ஆலங்குளம்:

திரு. அய்யல்சாமி அவர்கள், 2015-ல் இந்த சிமெண்ட் ஆலையில் அலுவலக பொறுப்பாளராக வேலை பார்ப்பதாகவும், தொடர்ந்து இந்த சிமெண்ட் ஆலையை ஆரம்பிக்க போராட்டம் நடத்தியும் ஆரம்பிக்கப்படவில்லை எனவும் கூறினார். எனவே தொடர்ந்து சிமெண்ட் ஆலை செயல்பட இந்த குவாரி அமைய வேண்டுமென தெரிவித்தார். எனினும் சுண்ணாம்பு கற்களை மட்டும் தோண்டி எடுத்துவிட்டு அதிலிருந்து உருவாகும் கழிவுகளை பக்கத்திலேயே கொட்டி விடுவதாகவும் தெரிவித்தார். தற்போது இங்குள்ள சிமெண்ட் ஆலைக்கு அரியலூரிலிருந்து Clinker கொண்டு வந்து அரைப்பதாகவும் தெரிவித்தார். மேலும் தற்போது இங்கு எடுக்கப்படும் சுண்ணாம்பு கற்கள் ஆலங்குளத்திலுள்ள சிமெண்ட் ஆலையில்தான் அரைக்கப்படுமா என்பதை தெளிவுபடுத்துமாறு வினவினார். முடிவில், இங்கு சுண்ணாம்புக்கல் சுரங்கம் அமைய வேண்டும் எனவும் வேலைவாய்ப்பில் இந்த ஊர் மக்களின் படித்த இளைஞர்களுக்கு முன்னுரிமை தருமாறும் கூறி இத்திட்டத்தினை வரவேற்றார்.

4. திரு.உக்கிரப்பாண்டியன், ஆலங்குளம்:

திரு.உக்கிரப்பாண்டியன் அவர்கள், இங்கு தோண்டி எடுக்கப்படும் சுண்ணாம்புக் கற்கள் இங்குள்ள சிமெண்ட் ஆலைக்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் எனவும், மேலும் கிராம மக்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை தருமாறும் கூறி இத்திட்டத்தினை வரவேற்றார்.

5. திரு.கிருஷ்ணன் மற்றும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக பிரதிநிதிகள்:

திரு.கிருஷ்ணன் அவர்கள், இத்திட்டத்தால் விருதுநகர் மாவட்டத்தில் பல ஊர்களில் சுண்ணாம்புக்கல் எடுப்பதாகவும் கூறினார்கள். ஆனால் இந்த சுண்ணாம்பு கற்களை எடுத்து எதற்கு உபயோகப்படுத்தப்படும் என தெளிவு படுத்துமாறு கேள்வி வைத்தார். மேலும், இக்கூட்டம் நடைபெறுவது பற்றிய முறையான முன்னறிவிப்பு பொது மக்களுக்கு தெரியபடுத்தவில்லை எனவும், மேலும் இதற்கு முந்தைய காலகட்டத்தில் இங்கு சுண்ணாம்புக்கல் இல்லை எனக் கூறினார்கள். தற்போது எவ்வாறு இங்கு சுண்ணாம்பு கற்கள் இருப்பதாக கூறுகிறீர்கள் என வினாவினார். M-sand தொழில்

நடத்துவதற்காக இக்கூட்டம் தவறுதலாக நடத்துவதாகவும் கூறினார். மேலும், இத்திட்டத்திற்கு அனுமதி அளித்தால் தொடர்ந்து பொதுமக்களை திரட்டி போராட்டம் நடத்துவதாகவும் கூறினார்.

6. <u>திரு.நேதாஜி, உசிலம்பட்டி, மதுரை மாவட்டம்:</u>

திரு.நேதாஜி அவர்கள் இக்கூட்டமானது இத்திட்டம் அமைவதால் சுற்றுச்சூழல் சம்மந்தமான பாதிப்புகளை கூறுவதற்காக எனக் கூறி, பல வருடங்களுக்கு முன்னர் ஓடையில் நல்ல தண்ணீர் இருந்ததாகவும், தற்போது நிலத்தடி நீரின் மட்டம் அதிக ஆழத்திற்கு சென்றுவிட்டதாகவும் கூறினார். இவ்வாறு ஓடைகளை அழிப்பதால் பல்லுயிர்ப்பெருக்கம் அழிந்துவிட்டதாகவும் தெரிவித்தார். மேலும், இவ்வாறு தோண்டி எடுத்தால் அபாயகரமான நிலநடுக்கங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும், அவர் இக்குவாரியின் அறிக்கையில் சிறுகனிம விதிகள் 1959 பிரிவு 36(1) மற்றும் 36(1)(9) ஆகியவற்றில் கூறப்பட்டுள்ள விதிகளில் விதி மீறல்கள் உள்ளதாகவும், தவறான தகவல்களை சமர்பித்துள்ளதாகவும் தெரிவித்தார். சிறுகனிம விதிகளின்படி 300 மீட்டருக்குள் வீடுகள் இருந்தால் குவாரிக்கு அனுமதி வழங்கக் கூடாது என விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார். மேலும், இந்த திட்டத்திற்கு இடையில் பல இடங்களில் பொதுப்பாதைகள் செல்வதாகவும் தெரிவித்தார். இச்சுரங்கத்திற்கு அனுமதி அளித்தால் இந்த இடமானது அபாயகரமான நில அதிர்வு மண்டலமாக மாறிவிடும் என எச்சரித்தார். எனவே, இத்திட்டத்திற்கு சட்டப்படி அனுமதி வழங்கக் கூடாது எனக் கூறினார்.

மேலும், இச்சுரங்கத்திற்கு 4 கிமீ தூரத்தில் வெம்பக்கோட்டை அணை அமைந்துள்ளதாகவும் கூறினார். மற்றும், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அனுமதிக்கு தேவையான 45 ஆவணங்களில் 35 ஆவணங்களை சமர்பிக்கவில்லை எனவும் தெரிவித்தார். ஏற்கனவே அமைந்துள்ள சுரங்கங்களில் காற்று மற்றும் ஒலி மாசு ஆய்வுகள் நடத்தப்படவில்லை என்றும் அதேபோல் எந்த ஒரு குவாரியிலும் வேலிகள் அமைக்கவில்லை என்றும் தெரிவித்தார். இறுதியாக, இத்திட்டத்திற்கு அனுமதி அளித்தால் இந்த இடம் வறட்சியாக மாறிவிடும் எனத் தெரிவித்து மேற்கண்ட பல

ஆவணங்களை முழுமையாக தாக்கல் செய்த பின்னரே இக்கூட்டமானது திரும்ப நடத்த வேண்டும் எனவும் கூறி இத்திட்டத்திற்கு அனுமதி வழங்கக் கூடாது எனக் கேட்டுக்கொண்டார்.

இதன் பின்பு, இத்திட்டம் தொடர்பாக கருத்துக் கூற வேறு யாரும் முன்வராததால், வருவாய் கோட்டாட்சியர், சாத்தூர் அவர்கள், மேலும் கருத்துகள் ஏதும் இருக்கிறதா என்று வினவினார். அதன் பின்பும் பொதுமக்களிடமிருந்து கருத்துகள் ஏதும் வரவில்லை. இறுதியில், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், விருதுநகர் அவர்கள் இதுவரை நடந்ததை தொகுத்துக் கூறி கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார். மேலும், எழுத்துப் பூர்வமான கருத்துக்கள்/மனுக்கள் ஏதும் இருப்பினும் வழங்கலாம் எனத் தெரிவித்தார்.

அத்துடன் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நிறைவுபெற்றது.

29.2.2024

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
விருதுநகர்

வருவாய் கோட்டாட்சியர்,
சாத்தூர்,
விருதுநகர் மாவட்டம்.

இணைப்புகள்:

1. வருகைப்பதிவேடுநகல் (மொத்தம் - 9 பக்கங்கள், 115 நபர்கள்)
2. பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டத்தில் வீடியோ (ஒலி மற்றும் ஒளி) பதிவு.
3. பத்திரிக்கைச் செய்தி நகல்கள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).